REGISTERED No. M. 1484.

# நாடார் குல மித்திரன்

# THE NADAR KULA MITRAN.


நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.
சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று
வெளிவரும்
மாதம் இருமுறை பத்திரிகை

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4 ] ருத்ரோத்காரி ஹூ சித்திரைமீ 29உ வெள்ளிக்கிழமை (அருப்புக்கோட்டை) 1923வஹ மேமீ 11உ [ இதழ் 26



இனாம்! இனாம்!!

## பெருங்காயம் செய்யும் முறை.

எமது மல்லிகா ஆயில் என்னும் சிறந்த கூந்தல் தைலம் 3 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு பெருங்காயம் செய்யும் முறை இனாமாய் அனுப்பப்படும். இம் முறையைக் கொண்டு ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி பெருங்காயம்செய்து, விற்பனை செய்வதால் சுகஜீவனம் செய்யலாம். மல்லிகா ஆயில் 3 பாட்டல் விலை ரூ 2. தபால் செலவு இனாம்.

K. N. S. & Co ARIMALAM.

## சென்னையில்.

## நாடார் போஜனசாலை.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் போகிற ஜனங்கள் தங்கிப் போவதற்குத் தகுந்த சௌகரியமுண்டு.

S. பழனியப்ப நாடார்,
மலையப்பெருமாள் வீதி நெ 59 வீடு.
மதராஸ்.



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பி முதலியவைகள் தங்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லகேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் மீளூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F S பெரையரா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெம்மை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார். எஸ். ராமசாமி நாடார்

ஓர் உண்மையான ஔஷதம்.

## மதனகாமேசுவர தாதுபுஷ்டி லேகியம்.

இவ்வுத்தம ஔஷதமானது சில அபூர்வமான மூலிகைகளின் சத்துக்களாலும், அநேக விலையுயர்ந்த வஸ்துக்களாலும். சுயமான தங்க பஸ்பமும் கலந்து முடிக்கப்பட்டது. நீண்டகாலமாய் உபயோகித்து அநுபவத்தில் புகழ்சிறந்து விளங்குவது. குணஞ் செய்வதிலிருந்தும் ஒருக்காலும் தவறாதது. இதனை டைரக்ஷனில் சொல்லியபடி உட்கொண்டு வருவதினால் அக்கினிமாந்திய ரோகம் நீடித்த மலபந்தம் பித்தாதிக்க ரோகம், அஜீர்ணரோகம், வாதப்பிடிப்புரோகம், தலைவலி, சரீரம் இளைத்து துர்பலமாயிருத்தல், இந்திரியம் நீர்த்துவிழுதல், வெள்ளை, வெட்டை, தந்திமேகம் இதன் வகுப்பில் சேர்ந்த 12 வகையும் க்ஷயம், காசம், குன்மம், பாண்டு, சோகை, கிரஹிணி முதலிய கொடியரோகங்களை நிவர்த்திப்பதில் வல்லமையுள்ளது. இது கெட்ட இரத்தத்தை சுத்தித்து சுத்தஇரத்தத்தையும் இந்திரிய விர்த்தியும் அக்கினி விர்த்தியும் உண்டாக்குவதுடன் சரீரம்பிம்பனைப்போன்ற வனுவும் உண்டாக்கி மலஜல விஸர்ஜனத்தையும் ஒழுங்குபடுத்தி சரீரமும் திடகாத்ரரோக்கியமாக இருக்கும்.

இந்த அதிர்ஷ்டகாலத்தை வீணாக்க வேண்டாம். ஒரு முறை வாங்கிஉபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். 21-நாள் சாப்பிடும் மருந்து டப்பி 1-க்கு விலை ரூபாய் 3—0—0. தபாற் சார்ச்சு இனாம்.

N. G. ராஜா அண்டு கம்பெனி,
மருந்து ஷாப் நெ 182.
பெரியகடை; திருச்சி

## ஹரிதாசர் மருந்துகள்.

## மிகவும் கைகண்டது.

காலரா மருந்து:—கொடுத்தவர் எல்லாரும் பிழைத்துக் கொண்டார்கள் ரூ 1—4—0

வாய்வு மாத்திரை:—50-க்கு ரூபாய் 1-0-0 சகல வாய்வுகளையும் கண்டிக்கும்

என்றுத்தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்தால் சகல கண்வியாதிகளும் மேகரும் நீங்கும்.

நீயூரல் தைலம்:—ரூ 1—4—0 இதை ஸ்நானம் செய்தால் சகல பித்தம், தலைநோய் பீநிசம் நீங்கும்.

ஹரிதாசர்யாந்த மாத்திரை.—50-மாத்திரை அணா 12 இதை உபயோகித்தால் சகலவித குழந்தை நோய்கள் தீரும் கைகண்டது. மற்ற வியாதிகளுக்கு எழுதி விபரம் அறியலாம். தீராத நோய்கள் நமது மருந்தில் திரும் நிச்சயம்.

வைத்தியர் H. தேவதாஸ்
B. A. L. T. A. T. T. U. M. P.
தாசா வைத்தியசாலை,
தின்னனூர்,
M. S. M. R

தபால் பெட்டி 555. தந்தி விலாசம். "மூக்குத்தாள்"

உலகெங்கும் புகழ்பெற்ற

# பட்டணம் பொடி

காரம், நிறம், வாடை, குணம், மணம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப் பெற்று தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்பட்டு தங்கமெடல் வெள்ளி மெடல் பரிசுபெற்று தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்,
பட்டணம் பொடி தொழிற்சாலை,
மதராஸ்.


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## நாடார்குலமித்திரன்

நத்ரோத்காரிஞு சித்திரைமீ 29௳

# சட்டசபை.

நமது சென்னை மாகாணச் சட்டசபை எலெக்ஷன் நடப்பதற்கு இன்னும் ஆறு மாதங்கள் தானிருக்கின்றன. காங்கிரஸ்க் காரர்கள் சட்டசபை விஷயமாய் சமரசமான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்வதென்று கெடுக் குறித்த நாளும் காலாவதியாகிவிட்டது. பெரும்பான்மைக் கக்ஷிக்காரர்களாகிய ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் வகையறாப் பேர்கள் பிடிவாதமாய் ஒத்துழையாமை இயக்கத்தையே கடைப்பிடித்து நிற்கின்றார்கள். ஸி. ஆர். தாஸ் வகையறாப் பேர்களாகிய சுயராஜ்யக் கக்ஷிக்காரர்களோ சட்டசபையில் புகுவதையே தீர்மானமாகக் கொண்டு தங்கள் பிரசார வேலையை ஆரம்பித்துவிட்டார்கள். நமது சென்னை மாகாணத்தைப் பொருத்த மட்டும் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியாரவர்களுக்குத் தகுந்த ஒத்தாசையிருக்கிறதென்றாலுங்கூட தாஸ் கக்ஷியை ஆதரிக்கின்றவர்களும் பெரும்பாலோர் இருப்பதாகவே தெரிகிறது. இவ்விரு கக்ஷிக்காரர்களும் தங்களுடைய பிரசாரத்தை ஆரம்பிக்கும்போது ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் என்ன செய்யப் போகிறார்களென்பது இன்னும் தெளிவாய்த் தெரியவில்லை.

இந்நிலைமையில் நாடார்கள் சட்டசபை விஷயமாய் தீர்க்காலோசனை செய்து தங்களுடைய முழுக் கவனத்தையும் இப்போதே செலுத்தவேண்டியது அவசியமாகிறது. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் இவ்வைந்து ஜில்லாக்களுக்கும் தகுந்த ஐந்து நபர்களை மகாஜன சங்கத்தின் மூலம் தெரிந்தெடுத்து ஓட்ஜாபிதாக்களைப் பார்த்துஆங்காங்கு ஒழுங்கு பண்ணும்பொருட்டு சர்க்குலர்களையும் பிரசாரகர்களையும் அனுப்பி தீவிரமான வேலைசெய்வதில் மகாஜன சங்கம் தகுந்த சிரத்தை எடுக்க வேண்டுமெனக் கோருகின்றோம். கான்பரன்ஸ் கூடுமளவே இது விஷயமாய் ஓர் முடிவுக்கு வந்துவிடவேண்டியது அவசியம்.

23-4-23ல் அருப்புக்கோட்டை, மு. மு. ஞாபகச்சின்ன வாசகசாலை இரண்டாவது வருஷக் கொண்டாட்டத்தின் போது கூடியிருந்த சபையோர்களெல்லாரும் இராமநாதபுரம் ஜில்லாவுக்கு நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடாரவர்களை சட்டசபை அபேட்சகராக நிற்க வேணுமென்று கேட்டுக் கொண்டதற்கு அவர்கள் அதைப்பற்றி தம்முடைய சம்மதத்தைத் தெரிவிக்காமலிருந்து விட்டார்களாயினும் கூடியிருந்த சபையோர்கள் அவர்களே நிற்க வேணுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதுடன் அது விஷயமாய் தீவிரமுயற்சி செய்து தக்கப் பிரசாரவேலை செய்வதாயும் ஒப்புக்கொண்டு ஏகமனதுடன் தீர்மானித்திருக்கிறார்கள். அதுபோல் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள எல்லா நாடார்களும் ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமி நாடாரவர்களே இராமநாதபுரம் ஜில்லாவுக்கு ஒருஅபேட்சகராக நிற்கும்படிவிருப்பு வார்களென்று நம்புகின்றோம்.

அப்படியே இதர ஜில்லாக்களிலுள்ள நாடார்களெல்லோரும் ஒன்று கூடி ஏற்றமானிதரொருவரைத் தெரிந்தெடுத்து நாடார் மகாஜன சங்கத்துக்கு அறிவிப்பார்களானாலும் மிகுந்தநலமாயிருக்குமென்றோம்.

ஓட்டர் ஜாபிதாக்களை ஒழுங்கு பண்ணிக் கொள்ளும் பொருட்டு முன்னம் பலதடவையிலும் எழுதி வந்திருக்கின்றோம். இப்போதுஅது சம்பந்தமாய் நாடார் மகாஜன சங்கம் வெளியிட்ட 13 நிர் சர்க்குலரின் முழுவிபரமும் மற்றொரு பக்கத்தில் பிரசுரம் செய்திருக்கின்றோம். ஒவ்வொரு நாடார்களும் அதைக் கவனமாய்ப் படித்துப் பார்த்து பத்து ரூபாய்க்குக் குறையாத கிஸ்தி செலுத்தும் பட்டாதார்களும் அல்லது பத்து ரூபாய்க்குக் குறையாத கிஸ்தி செலுத்தும் நிலங்களை பயிர் செய்வோரும் முனிசிபாலிட்டியில் மூன்று ரூபாய் ஆஸ்திவரி தொழில்வரி செலுத்துவோரும் வருமானவரி செலுத்துவோரும் அந்தந்த ஜில்லாத் தாலூக்காக்களில் ஓட்டர் சாபிதாவில் தங்களுடைய பெயர்கள் விலாசங்கள் சரியாய் எழுதப் பட்டிருக்கின்றனவா வென்று பார்த்து ஏதாவது விடுபட்டிருந்தால் உடனே திருத்தும்படி ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

தவிர ஒரு குடும்பத்தில் பத்துப் பேர்கள் இருந்து அவர்களுடைய சொத்துக்களையும் வீதாசாரப்படி பாகம் பண்ணிக்கொண்ட போதிலும் பட்டா மட்டும் அக்குடும்பத்தில் ஆதியில் யாருடைய பெயரால் பதிவு செய்யப் பட்டிருந்ததோ அப்படியேதான் இன்னும் இருந்துவருகிறது. முனிசிபல்களிலுள்ள கட்டடங்களின் வரிகளும் அப்படியேதானிருப்பதாகவுந் தெரிகிறது. ஆகையால் இவைகளை யெல்லாம் ஓட்டர்கள் கவனித்து உடனே திருத்தம் செய்து கொள்வார்களாக.

# மதிப்புரை.

### ஜீவானந்த போதினி.

இஃதொரு மாதாந்தரத் தமிழ் பத்திரிகை. இதன் முதல் சஞ்சிகை கிடைக்கப் பெற்றோம். தமிழ் பூஷணம் வாசுதேவராவ் கேய்க்வாரவர்கள் இதன் ஆசிரியர். இதில் பலஅரிய வியாசங்கள் அடங்கியிருக்கின்றன. விலாசம்:–
பத்திராதிபர், "ஜீவானந்த போதினி"
176 தங்கச்சாலைத் தெரு சென்னை.

### ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்.

இம்மகுடம் புனைந்த ஒரு ஆங்கில தமிழ்மாதப்பத்திரிகை திருநெல்வேலியிலிருந்து வெளிவருகிறது. இதன் பத்திராதிபர் டாக்டர் அன்னுதாமஸ் அம்மாள் அவர்கள். இது சுகாதாரம், தாய்முறை, சிசுவின் சுகவாழ்வு முதலிய அரிய விஷயங்களை போதிக்குமாறு வெளிவந்துலாவுகிறது. வருடச் சந்தா ரூ 3—0—0 தான்.

### தாய்நாடு.

இஃது திங்கட்கிழமை தோறும் வெளிவரும் தேசீய வாரப் பத்திரிகை இதனுடைய முதல் பிரதி கிடைக்கப் பெற்றோம்: இது தனது நோக்கத்திற் குத்தகுந்தவாறு பலராஜீய தேசியவிஷயங்களை, தாங்கிக் கொண்டு வெளிவருகிறது. இதன் வருடச் சந்தா ரூ 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தாய்நாடு" ஆபீஸ்
திருச்செங்கோடு.

### The Anglo Tamil Gem, Vocabulary.

"ஜெம்வகீகபிலேரி" என்னும் இப் புத்தகத்தின் மூன்றாவது நான்காவது பாகங்கொண்ட பிரதியொன்று கிடைக்கப் பெற்றோம். இப்புஸ்தகம் இங்கிலீஷ்கற்கின்ற எல்லோருக்கும் மிக்க அருமையானவை. ஆங்கிலம் கற்க நினைப்பவர்களுக்கு இது தக்கஉதவியாயிருக்கும் இதன் விலை ரூ 0—8—0. விலாசம்:—
சாமிவேல். வி. கோவில்பிள்ளை
தலைமைஆசிரியர்,போர்டுஸ்கூல் ஆரணி.

# நம் நிலை.

(ஆசிரமபோதினி நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.)

மனிதராய்ப் பிறத்தலினும் பக்ஷியாய் மிருகமாய்ப் பிறத்தல் மேன்மையென்று சொல்லலாம். ஒவ்வொருவரும் பாலியத்தைக்கடந்து வாலிபத்தை யடைந்தவுடன் தனக்கும், தன் குடும்பத்திற்கும் தேவையான உடை உண்டிகளைத்தேடக் கடமைப் பட்டவர்களாகிறார்கள். பக்ஷியோ, மிருகமோ மற்றும் ஊர்வன நகர்வனவோ தாங்கள் தங்கள் இயற்கையறிவால் தங்கள் தங்களுக்குப் போஷித்துக் கொள்ளுகின்றன. மனிதர்களுக்கோ அவ்விதமில்லை. இயற்கை அறிவோடு சேர்க்கை அறிவுவேண்டும். சேர்க்கையறிவில்லையாயின் மனிதர்கள் ஜீவிக்க முடியாது. இயற்கை அறிவோடு சேர்க்கை அறிவு இல்லானை பைத்தியகாரனென்று உலகம் சொல்லும். இப்பைத்தியகாரன் தன்னைப் போஷிக்கும் வழியறியான். சேர்க்கை அறிவிற்கு ஆதாரமாயிருப்பது கல்வி. இக்கல்வியோடு கைத்தொழிலும் கற்றாலொழிய மனிதர்கள் ஜீவிக்க மார்க்கமில்லை. நமது மாணவர்களுக்குப் பள்ளிகளில் கல்வியட்டுமே போதிக்கப்படுகிறது. கைத்தொழில் போதிக்கப் படுவதைக் காணோம். அநேகம் வாசித்தவர்கள் பிழைக்க வழியற்றுத்திண்டாடுவதை நாம் தினந்தினம் காண்கிறோம். படியாதவன் கூலித்தொழிலை நாடியலைகிறான். 1-முதல் 7-வது வகுப்புவரை வாசித்தவன் எந்த கவர்ன்மெண்டாபீசில் பியூன் (சேவக) வேலை காலியாயிருக்கிறதென்று தேடியலைகிறான். 8-முதல் 10வரை வாசித்தவன் குமஸ்தா வேலையை நாடியலைகிறான். 11–12-வது வாசித்தவர்கள் வக்கீல் உத்தியோகத்தை டாக்டர் வேலையை, குமஸ்தாவேலையை தேடியலைகிறார்கள். கூலிவேலையும் சேவகத்தொழிலும் குமஸ்தாத் தொழிலும் வக்கீல் உத்தியோகமும் எத்தனை பெயரைத்தான் போஷிக்கும். படித்தவர்களெல்லாம் இந்நாலு தொழிலையே நாடி நிற்பதால் நம் தேசம் வறுமையாற் பீடிக்கப்பட்டு தத்தளிக்கிறது. ஒரு ஆபீசில் ஒரு சேவகனோ குமஸ்தாவோ இறந்தால் அவ்வேலைக்கு 100, 200 மனுக்கள் வந்துகுவிகின்றன. அம்மனுக்களில் எத்தனை சிபார்சுகள் எத்தனை சர்ட்டிபிக்கேட்கள் வேண்டியிருக்கிறது. என்னென்ன கஷ்டப்பட்டும் கடைசியில் பட்டாளத்துக்குப் போனவர்களுக்குத்தான் அச்சேவக வேலையோ, குமஸ்தா வேலையோ கொடுக்கப்படுமெனச்சொல்லிவிடப் படுகிறது. பட்டாளத்துச் சிப்பாய்களிலும் நான் முந்தி நீ முந்தி என்பதோடு சிபார்சும் தேடவேண்டியிருக்கிறது. ஐயோ பரிதாப இந்தியத்தாயின்மக்களே உங்கள் கதி இதுவா?

சேவகத்தொழிலும், குமஸ்தாத் தொழிலும் வக்கீல் டாக்டர் தொழில்களும் இல்லையானால் இங்கு பிழைக்க வழியில்லை. சிங்கப்பூர், பினாங்கு, மோரீஸ், பிஜி இலங்கை ஆகிய இடங்களுக்குப் போகலாம். அங்கு மெய்யெல்லாம் நிறத்தாரிடம் கட்டுண்டு கஷ்டப் படலாம், உதைபடலாம், உண்ணப்போதுமான கூலி கிட்டாது தட்டுத் தடுமாறி சாகலாம்.

இக் கஷ்டமெல்லாம் இல்லாது லாபமடைய ஒருயோசனை! எக்காலத்துக் கடன் வாங்கியோ கையிலிருக்கும் சொற்ப காசையோ கொடுத்து,மெஷின், மோட்டார் கம்பெனி அச்சாபீஸ் எண்ணெய் இஞ்சின் பயாஸ்கோப் கம்பெனி ஆகிய இவைகளை ஆரம்பித்தால் இங்கு போட்டிகள் முளைத்து நீ வாழவேண்டாம். நானும் வாழவில்லையென்று உள்ளதையும் இழந்து அநேகர்கடனாளியாய்க் கஷ்டப்படுகிறார்கள்.

வியாபாரம் செய்யலா மென்றாலோ, 10 ரூபாய் வைத்து வெற்றிலைக் கடை காய்கறிக்கடை, பால்கடைகளும், 200, 300 கடன்வாங்கி காபிக்கடை, தாகு மண்டிக்கடை, பலசரக்குக் கடை, ஜவுளிக்கடை, புஸ்தகக்கடை, பீங்கான்கடை (ஷாப்), ஜட்கா வண்டிகள் ஆகிய இவைகளை வைக்கிறார்கள். இவர்களாவது பிழைத்தார்களா? இல்லை,இல்லை. இங்கு போட்டிகள்வந்து நுழைந்து ஒரு கடை இருந்தஇடத்தில் ஒன்பது கடைகளாகப்பெருத்து எல்லோரும லாபமடையாமல கஷ்டப்பட்டு துன்புறுகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் எத்தனை வியாபாரி நொடித்துப் போனவர்கள், எத்தனை பேர்கள் வாரண்டு ஜப்திக்கு ஒளிந்து அலைகிறார்கள் என்பதும் நாம் தினந்தினம பார்த்தும் அறிந்தும் வருகிறோம். கூலிவேலைசெய்தேனும பிழைக்கலா மென்றாலும் வேலைகிடைக்கவில்லை. கிடைத்தாலும் அங்கும்போட்டிகள் பிழைக்க வழியைக்காணோம். தரித்திரம் தாண்டவமாடுகின்றது. உண்ண உணவைக்காணோம்,உடுத்தத் துணியைக் காணோம். செய்யத்தொழிலைக்காணோம், விடிந்தால் விவகாரமாயிருக்கிறது. பஞ்சமும் பிணியும் பசியும் ஜெயிலும் நம்மதாயிருக்கின்றன. இந்திய மக்களே! நாம் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகளென்பதையோசித்து ஆனந்தங்கொள்ளுங்கள்!!

# நாடார்குல மித்திர இரத்தினமே வருக!

தென்றலோடு உயர்ந்த காவினங்கள் செறிந்த முதுநகராம் அருப்புக்கோட்டை யெனும் மாசற்ற நகரில் கோடி சூரியன்போல் ஜனித்து, மாண்புமிக்க திருமுத்து நாடனைத் தாயதந்தையாகப் பெரும் சிலாக்கியமுற்று இளம்பிறையை வெல்லும் வதனங்கொண்ட குலமாது சிரோன்மணிகள் மடிகளில் தவழ்ந்து விளையாடி மகிழ்வுறுத்தி இளஞ்சிறார் களிலிருந்து மங்களப்பாடி நின்குல நியாயதுரந்தார், தாக்டு முத்தாடிக்கொண்டாடவும் க்ஷத்திரியகுலப் பாமரர்கள் இல்லங்கள்தோறும் ஏகிகட்டாயக்கல்வி சக்கம் ஒற்றுமை தருமசிந்தை குலதர்மம் முதலான சற்காரியங்களைக் கடைப்பிடிக்கத்தூண்டி மகாஜன சங்க மகிமையை எங்கும்போற்றிக் கொண்டாடும் வண்ணம்செய்து, கிறிஸ்தவ இந்துநாடார்களின் அரிய ஒற்றுமையை எவரும் போற்றும்வண்ணம் ஸ்திரப்படுத்திமாதா மாதம் தரிசித்துப் பின்னர் இந்முறை கண்டு களிகூர்ந்து இந்நிலையில் மும்முறை வந்தருள்புரியும் மித்திர இரத்தினமே! வாரா வாரம் வந்து சென்னைகளில் தினந்தினம் உன்னைக்கண்டுகளிகூற மெத்த ஆவலுறுகின்றேன். என்னவா நிறைவேற எக்காலத்தில் இறைஞ்சுவாய்! நின்தந்தை கொழும்பு முதல் இரங்கூன் ஈறாக குல இரத்தினங்களைக்காண வேட்புற்றுப்போந்த அன்றைவைத்தருளிய எந்தலைகளை வாழ்த்தி மங்களகோஷம் புரிக! குலாபிமானமே ஓர் உருவெடுத்து வந்தாற்போன்ற போஷகப் பிரபுக்களையும் குலாபிமானமெனும் அணிகலம் பூண்ட நன்கொடைதந்து நினைத்தனப் படுத்தியசான்றவகுலப்பெரியார்க்கு நல்லாசிகல் கூறுவாயாக. தினம் தங்களை வந்து சந்திப்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறி எனத் தீர்க்கதரிசனம் உரைத்திடுவாயாக! முகஞ்கோணாது சதா இன் சொல்கலந்து க்ஷத்திரிய இரத்தம் ததும்பிய மாசற்ற மன்னர் மரபினர் எனப் போற்றி வாழ்த்திடுவாயாக!

நமது ஜனசமூகம் இன்னும் போதிய வாறு முற்போக்கடையாமையால் மகாத்மாகாந்தி யென்றும் அமிதவாதக் கக்ஷியில் சாராமலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கூச்சலிடும் ஸர் பி. தியாகராஜ செட்டியார் கட்சி (பிராமணரல்லாதார்) யில் சேராதும், மிதவாதக்கக்ஷியான ஸ்ரீனிவாசசாஸ்திரியார் கக்ஷியைக் கலக்காது நிற்கும்நினது மகா ஜனசங்கம்எண்ணத்தை சிரமேற்கொண்டு நமது முன்னேற்றத்தை மட்டும் தன் னேற்றமாகக் கொண்டுழைக்கும் குலக்கொழுந்தே! நின் கீர்த்தி நிலவுலகில் நிலவுக!

நீ பல்லாண்டுகுலசைங்சரியத்திற்கீடு பட்டுபொதுஜனசேவைசெய்வதேதன்னருஞ்சேவையெனக்கொண்டநின் தந்தைக்குப் பத்துலட்சம் ஜனசங்கைகொண்ட நாடார் மஹாஜனங்கள் நன்றியைச் செலுத்துவது இன்றியமையாத கடமை. நீ பன்னாள் வாழ்கவெனப் பகவானைப் போற்றிப் பணிவாம். சுபம்!

ஏ. ராஜநாயகம் நாடார்.

# பின்வந்த செய்தி.

### நாடார் மகாஜன சங்கமும், 9-வது கான்பரன்சும்.

திருநெல்வேலியில் 9-வது கான்பரன்ஸை நடத்திவைக்க ஏற்பாடு செய்யவேணுமாய் ஏற்பட்ட கமிட்டி நாளது மேமீ 13-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணிக்கு மதுரையிலிருந்து பிரயாணமாகி திருநெல்வேலிக்குப் போவதாக தீர்மானித்திருக்கிறது. அக்கமிட்டிக்கு ஆங்காங்குள்ள குலாபிமானிகள் ஒத்தாசைசெய்து 9-வது கான்பரன்ஸை சிறப்பாய் நடத்திவைக்கவேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சுதந்திரம்.

(முன் தொடர்ச்சி)

## சுதந்திரவழி.

கட்டைவண்டியில் ஏறினவர்கள் குதிரைவண்டியிலும், பின்னுல் மோட்டார், ரயில்வண்டியிலும் ஏறப்போவதற்கு ஆசைப்படுவது மனுஷஇயற்கை. நாடார் மகாஜன சங்கத்திற்கு ஸ்ரீமான் ம: வே. பழனிச்சாமிநாடார், ஸ்ரீமான் புன்னையப்ப நாடார் காரியதரிசிகளாக வந்ததிலிருந்து முன்னிலும் தீவிரமாக வேலை நடந்தாலும் இன்னும் தீவிரமாகவும் பலன் தரும்படியும் வேலைசெய்ய வேறுவழி யுண்டாவென்று பார்ப்பது நாடார் ஜாதியின் முன்னேற்றத்தைக் கருதுபவர்கள் கடமையல்லவா!

காங்கிரஸ்காரர்கள் எவ்வளவோ பாடுபட்டும் அதற்குத்தக்க பலன் கிடைக்காவிட்டாலும் கவர்ன்மெண்ட் நிர்வாக அதிகாரம் அவர்கள் கைக்குவந்தால் அவர்களிஷ்டம்போல் தேசமுன்னேற்றத்தில் [illegible] அல்லவா? அதேபோல் நாடார்களின் நிர்வாக [illegible] அதன் [illegible] சுலபந்தானே. நாடார்களின் முன்னேற்றங்கள் தங்கள் ஜாதியார் பூராவும் சேர்ந்து வாழ்வதற்கான முறைகளை ஏற்படுத்தியிருக்கிறார்களாவென்று பார்ப்போம். ஒவ்வொரு ஊரிலும் சகல வல்லமையுள்ள உறவின்முறை ஏற்படுத்தி அதில் அந்த ஊர் நாடார்களை பூராவும் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். மேலும் பெரிய ஊர்களாக ஆறு ஊர் தெரிந்தெடுத்து ஆறூர் தலைவர்கள் மற்றவர்கள் யோசனையும்கேட்டு சகல காரியங்களையும் நடத்துவதென்றும் அந்தந்த பெரிய ஊருக்குப் பக்கத்திலுள்ள சிறுஊர்கள் அந்தப் பெரிய ஊர் வட்டத்தைச்சேர்ந்ததென்றும ஏற்படுத்தியிருக்கிறார்கள். [illegible] யாவு நாடார்களுக்கும் அதேமாதிரி யிருப்பதாகத்தெரிகிறது. அந்த முறையில் தற்போது நடந்துவந்தாலும் ஒற்றுமைக் குறைவால் சில கட்டுப்பாடுகள் சரிவர நடைபெறவில்லை அதை எல்லாம் பழயநிலைமைக்குக் கொண்டுவந்து பழயபடி கட்டுப்பாடு செய்வதோடு தற்கால முறையில் சில திருத்தங்கள்செய்யலாம். ஒவ்வொரு ஊரைப்பொருத்த சகல விஷயத்திற்கும் பூராசுதந்திரமும் கொடுத்து பொதுவாழ்வில் அந்த ஊருக்கு மேல்பட்ட ஊருக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். சிறு ஊர்களை கிராமமாகவும் பல கிராமங்கள் சேர்ந்தது நகரவட்டமாகவும் பல நகரங்கள் சேர்ந்தது தேசவட்டமாகவும் பல தேசங்கள் சேர்ந்தது மகாஜன சங்கமாகவும் ஏற்படுத்த வேண்டும். நகரவட்டத்திற்கு ஆறூர்முன்னமே ஏற்பட்டிருக்கிறது ஏற்படாத தேசவட்டத்திற்கு ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது. மேலே தேசவட்டத்தை பின்வருமாறு பிரிக்கலாம். வடஜில்லாக்களை உத்தரதேசமென்றும் மதுரை இராமநாதபுரம்ஜில்லாக்களை வடபாண்டிய தேசமென்றும் திருநெல்வேலி ஜில்லாவை தென்பாண்டிய தேசமென்றும் இலங்கை பர்மா ஆக ஐந்து தேச வட்டங்களாகப் பிரிக்கவேண்டும்.

மேலேகண்ட பிரிவுகளுக்கு உதாரணமாக; வடபாண்டிய தேசத்திற்கு உள்பட்டதுஆறூரில்ஒன்ருகிய விருதுநகர். நகர வட்டத்திற்கு உட்பட்டது பாலமேடுகிராமம்இப்படியேமற்றவைகளையும் தலைவர்கள் தெரிந்தெடுப்பதில் இப்போதிருக்கிற முறையை அனுசரிக்கலாம். இதெல்லாம் பழய முறைகளை புதுமாதிரியாகத் திருத்த வேண்டியதைத் தவிர கஷ்டமான புதுவழி ஒன்றுமில்லை. 5 தேச வட்டத்திற்கு மகாஜன சங்கத்தை மத்திய அதிகார ஸ்தானமாக வைத்து அதில் கிராமம் நகரவட்டத்திலிருந்துதேசவட்டத்திற்கும்அதிலிருந்து மகாஜன சங்கத்திற்கு நிர்வாக அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பதோடு பல இடங்களிலு முள்ள ஜாதீய உழைப்பாளிகளுக்கென்று சில ஸ்தானங்களை ஒதுக்கிவைத்து அவர்களை நியமிக்கவேண்டும். இதனல் பொறுப்புள்ள நாடார் தலைவர்கள் பூராவும் நிர்வாகத்தை ஒப்புக்கொள்வார்கள். நாடார்ஜன சமூகம் பூராவும் சங்கத்தின் அங்கத்தினர்களாகி தங்கள் ஊரிலேயே சந்தாப்பணம் கட்டி அங்கிருந்து மகாஜன சங்கத்திற்குப் போய்விடும். மகாஜன சங்கம் நாடார்ஜன சமூகம் பூராவுக்கும் உலகம் கேட்டறியாத ஜவாப்தாரியான சபையாகும். இதன் மூலமாக பிரசாரத்தை கட்டுப்பாடாகவும் தீவிரமாகவும் நடத்த ஏதுவாகும். சிலர் இது எப்படி முடியுமென்று நினைக்கலாம். தலைவர்களும் பொதுஜனங்களும் நினைத்தால் ஒருநொடிப்பொழுதில் முடியும் அப்படித்தான் திருத்தவும் வேண்டும். வசூலிக்க முடியுமாவென்று சந்தேகித்த தலைக்கட்டுவரி விருதுநகரில் உறவின் முறை மூலமாக சமீபத்தில் 2நாளையில் வசூலானதேபோதுமான அத்தாக்ஷி. இனி இப்போதிருக்கிற முறையைத் திருத்தவேண்டுமென்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது. நாடார் சகோதரர்களே சற்று யோசியுங்கள் நம்ஜாதி இழந்த சுதந்தரங்களை அடையவேண்டுமானல் நம் கஷ்டம் நீங்க வேண்டுமானல் நாம் சுகவாழ்வு வாழவேண்டுமானல் வரிந்து கட்டி எழுந்திருங்கள் ஒவ்வொரு ஊரிலுள்ள உறவின் முறையை மகாஜன சங்கத்தின் கிளைச்சபைகளாக்குங்கள். இப்போதிருக்கிற கிளைச்சபைகளுக்கு வேறுபேரிட்டு தேசிய ஜாதீய வேதாந்த நேசாப்பியாச முதலான சகலவிஷயங்களையும் விரிவான நோக்கத்தோடு ஆராய்ச்சி செய்யுங்கள். மகாஜன சங்கத்தின் அமைப்பைத் திருத்தி பின்னல் அதன் நோக்கத்தைக் கவனியுங்கள். (தொடரும்)

சுதந்திர தாஸன்.

# செய்தித் திரட்டு.

## பாரா உஷார்!

“உஷார்! உஷார்!! சிப்பாய்மார்களே, உங்கள் உடல் டொப்பிபத்திரம் யான் சொன்னேன்! சொன்னேன்!! என்று சதாரம் சரித்திரத்தில் திருடன் ஆக்ட்செய்கிற நடிகர்கள் கூவுவது வழக்கம். உண்மையில் நாடகம் பார்க்கவந்திருக்கிற ஜனங்களாவது நடிகர்களாவது பயப்பட்டு உஷாரா யிருக்கத் தேவையில்லை இதேவிதமாய் வரப்போகிற சட்டசபை எலெக்ஷனில் அபேக்ஷகராய் முன்வரக்கூடிய நாடார் கனவான்களுக்கன்றி வேறேயொருக்கு நாடார்கள்தம் ஓட்டுகளைக் கொடுக்கவிடக்கூடாதென்று [illegible] களும் பத்திராதிபர்களும் [illegible] கைகள் வாயிலாய் உஷார் செய்துகொண்டே யிருப்பதைத்தவிர நாளதும் நாடார் அபேக்ஷகர் ஒருவரேனும் முன் வந்ததாகத் தெரியவில்லை. சுதேச மித்திரனில் ‘சட்டசபைத் தேர்தல்’ என்ற பகுதியில் இனிமேல் எத்தனையோ அபேக்ஷகர்களின் நாமதேயங்கள் புதிது புதிதாய் [illegible]. [illegible] ஜன சங்கமானது தகுதியுள்ள சில கனவான்களை அடிக்கடி வற்புறுத்தி அபேக்ஷகராய் நிற்கச் செய்யுமாவென்று பார்த்தால் அதுவுமில்லை இதுவுமில்லை. தகுதியுள்ள கனவான்கள் இப்பொழுதே, வெற்றி பெருவோமோ யாதோவென்றசந்தேகத்தில் மௌனம் சாதிக்கிறார்கள், மேலும் உழுகிறகாலத்தில் ஊர்வழிதிரிந்து அறுக்கிறகாலத்தில்ஆள்பட்டாரத்த ஆசாமிபோல நமதுமகாஜனசங்கம்துவக்கத்தில் மெத்தனமாயிருந்துவிட்டு எலெக்ஷன் சமயத்தில் தந்தியும் நோட்டீசும் அனுப்பலாமென ஏமாந்துவிடாமல் உஷாரா யிருக்குமாறு கோருகின்றோம் என கொழும்பிலிருந்து வாணிதாஸன் எழுதுகிறார்.

* * *

## ஓர் குலபாதகம்.

28-4-23-ல் சிலோனைச்சேர்ந்த ஆமத தோட்டத்தில் ‘சிமியோ’ னென்ற ஓர் சிங்களவன் தன்னுடைய வேலைக்குச் சென்று திரும்பி மனை வீட்டுக்கு வரும்போது தன் சொந்தமனைவி சோரநாயகனுடிருக்கக் கண்ட செந்தபுருஷன் கோபவெறி கொண்டவனுய் ஆயுதத்தால் வெட்ட எத்தனிக்கவே அந்நியன் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிவிட்டான். ஓடி விடவே தன் மனைவியை வெட்டினன். வெட்டவே மரணமடைந்துவிட்டாள். தன் பக்கத்தில் நின்ற ஒருவயதுள்ள குழந்தையின் மேலும வெட்டுப்பட்டது. உடனே குழந்தையை ஆஸ்பத்திரிக்கு குற்றுயிராய் கொண்டுபோய் சிகிச்சைசெய்தும் மறுநாள் மரணமடைந்துவிட்டது. சிமியோன் என்பவனை காவலில் வைக்கப்பட்டிருக்கிறது கேஸ் இன்னும் முடிவாகவில்லை. கவர்ன்மெண்டு மூலமாய் கேஸ் விசாரணை யாகிறது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

## கமுதி வித்தியாபிவிர்த்தி சங்கம்.

இச்சங்கத்தின் 7-வது வருஷப் பூர்த்திக்கொண்டாட்டம்கள் ருத்ரோத்காரி ஞூ வைகாசி மீ 12-13உ க்கு மேமீ 25-26உ வெள்ளி சனிக்கிழமைகளில் நடைபெறுமாதலால். அது சமயம் அறிஞர் பலர் சன்மார்க்க உபந்யாசம் செய்வார்கள், உள்ளூர் வெளியூர் அபிமானிகளனைவர்களும் தவருது வந்திருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம் என்று காரியதரிசி எழுதுகிறார்.

* * *

## திருவிழா வைபவம்.

தென் திருவிதாங்கூரில் கோட்டாற்றுக்கு அடுத்த இருளப்பபுரம் என்னும் கிராமத்தில் சிலநூற்றாண்டுகளுக்குமுன்னரே நமகுல முன்னோர்களால் சிவாலயமொன்று பிரதிஷ்டிக்கப் பட்டுளது. அக்காலத்தில் அதில் பூஜைமுதலிய கைங்கரியம் நடாத்தும் பூஜாசாரிக்கு சிவபெருமானே நாளொன்றுக்கு ஒரு பொன்காசுவீதம் அளித்துவந்ததாக எங்கள் முன்னோர்களால் கூறப்பட்டுவருகிறது. இவ்வாறு மகத்துவம் பொருந்திய ஷை ஆலயத்தை எங்கள் கிராமத்தவர்களின் இடைவிடாமுயற்சியினலும் மற்றும்பல குலாபிமானிகளின் நன்கொடையாலும் சுமார் பதினயிரம் ரூபாய்வரை செலவு செய்து திருப்பணிவிடைகள் முடித்திருக்கின்றனம். ஷை க்ஷேத்திரத்தில் நிகழும் ஆண்டு சித்திரை மாதம் 9-ந் தேதி துவஜாரோஹணம் (கொடியேற்று) ஆரம்பித்து பத்துநாட்களிலும் முறையே திருவிழா முதலிய வைபவங்கள் நடைபெற்றன. பக்தர்களாகிய நம் குலாபிமானிகள் பலர் விஜயம்செய்தார்கள் என்று ஸ்ரீமான் ஈ. வலியபெருமாள் நாடார் எழுதுகிறார்.

* * *

## செங்குன்ற புரம்.

இவ்வூரில் 3-4-23ல் மாலை 5மணிக்கு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் சோமவாரபஜனை ஆலயத்தில் எழுந்தருளியாயிருந்தார். பலஜனங்களும்போய் பகவானை ஆனந்தங்கொண்டுவணங்கினர்கள். 4-4-23 காலை 7மணிக்கு சப்பரத்தில்வைத்து புஷ்பமாலைசூட்டி பஜனை கச்சேரியுடன் ஊர்வலம்வந்தது என்று ஸ்ரீமான் எஸ். எஸ். சங்கரலிங்கம் எழுதுகிறார்.

* * *

## சிவலோக பிராப்தியடைந்தனர்

நிகழும் ருத்ரோத்காரி ஞூ சித்திரை மீ 11உ சோமவாரம் காலை சுமார் 7-மணிசமயம் திருவிதாங்கூரில் உன்னங்குளம் என்னும் கிராமத்தின்கண் குலசேகரப்பெருமாள்நாடார் என்னும் கண்ணியம் நிறைந்த புண்ணியவான் தனது அறுபதாவதுவயதில் இம்மண்ணுலகை விட்டுப் பொன்னுலகடைந்தனர். அன்னவர்கள் குடும்பத்தாருக்கு எல்லாம் வல்லஇறைவன் நல்லாறுதலளிப்பாராக.

# ஜீவகாருண்ணியம்.

முன் தொடர்ச்சி.

ஜீவகாருண்ணிய மென்பது யாது? ஜீவர்களிடத்துண்டாகும் தயை அல்லது இரக்கம். அதாவது ஜீவர்களுக்கு ஜீவர்கள் பசி, தாகம், பிணி, பயம், இச்சை, எளிமை, கொலை முதலியவைகளால்நேர்படுந் துன்பங்களைக் காணல் கேட்டலாகிய அக்ஷணமே யுண்டாகிற ஆன்ம உருக்கத்தினன்றி [illegible] அத்துன்பங்களினின்றும் தங்களால் கூடியமுயர்சியால் நீக்கி விடுவிப்பதே [illegible]. மேலும் இதன் விரிவு [illegible] பூரணமாய்க் காணலாம்.

## ஜீவகாருண்ணிய உற்பத்தி.

[illegible] அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய், சர்வபரிபூரணமா மென்றும் நிறைந்தோங்கியாய், சாக்ஷாத் விபுவாய், தானே தானாய், தனக்குவமை யல்லாதாய், நித்திய நிர்க்குண, நிர்மல, நிராமய, [illegible] சன, [illegible] தான் அனந்த [illegible] பஞ்சமகாபூதங்களாய் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமாய், அண்ட சராசரங்களாய், ஆன்மாக்களின் இருவினைந்நீடாய், நால்வகை யோனி, எழுவகைத்தோற்றமாய் உள்ளும் புறம்புமின்றி சர்வாந்தர்யாமியாய் பிர்மா. விஷ்ணு, ருத்திரன், மயேஸ்வரன். சதாசிவமென்னும் பஞ்சகர்த்தாக்களாய் முறையேசிருஷ்டி திதி, சம்ஹாரம், திரோபவம் அனுக்கிரகமென்னும் பஞ்சகிர்த்தியனாய், பல்கோடியுயிர்கட்குணர்வாய் மலரின்கண் வாசம் போல் எங்கும் பிரகாசமாய் சோமசூரியாக்கினி முச்சுடராய் எவ்வுயிர்க்கு மீசனாய் சர்வஜீவதயாபரனாய் விளங்கும் சாக்ஷாத் பரப்பிரஹ்மத்தினிடம் இச்சீவகாருண்ணியமானது தோன்றி பரிபூரணமாய்நிறைந்திருக்கின்றனது. அஃதெவ்வாறெனின் பிரபஞ்சமாயா லேசத்தோடு கூடிய அஞ்ஞான மென்னும் பாசபந்த கட்டுகளால் பிணிக்கப்பட்டு தன்னிலைமை புணராத ஜன்மாத்மாக்களிடத்து [illegible] ஜீவகாருண்யமானது தோன்று தொளித்தும் அஞ்ஞானமென்னும் அறியாமை யாகிய தன்மறைப்பைக்கெடுத்து அமோகப்பட்ட புண்ணியாத்மாக்கள் தன்னிலையறிவதால் தன்குணமாகிய பேரன்பும் சத்தசாத்வீகமும் பொறுமையும் ஜீவகாருண்யமும் அன்னோர்களிடத்திலேயே பலித்து காணப்படுகின்றனவென்பது யாவரும்ஒப்பக் கூடியது. ஆகையால் ஜீவகாருண்ய மென்பது எங்கும் நிறைந்து எம்மதமும் சம்மதமாய் [illegible] தன்னையொப்பபட்ட ஜீவர்களுக்கு பிறவாமுத்தியளித்துப், அனந்தம் திருவிளையாடல் புரிந்து வருங்கருணைக்கடலாய், ஒன்றினும் பற்றின்றிய சுயப்பிரகாசவஸ்துவாகிய பிரஹ்மம், இனிடமே ஜீவகாருண்யமானது உற்பத்தி என்பது சம்சயவிபரீதங்களின்றித் தெளிவாகின்றன,

## அனுஷ்டிக்கப்படும் விதம்

கொலைசெய்யாமலும் புலாலருந்தாமலும் சாகபட்சணிகளாய், ஜீவகாருண்யத்தைக் கைக்கொண்டிருக்கிறோ மென்றெண்ணியிருக்கிற மனிதரிற் பெரும்பாலும் தனவந்தர்களா யிருப்பவர்களும், உயர்ந்த ஜாதியென்றெண்ணிக் கொண்டிருப்போரும் உத்தியோகஸ்தரும் தன்னிற் குறைந்தவர்களும் ஏழைகளாயும், நடுத்தரமாயுள்ளவர்களில் ஓர் மானுடன் தன்னிடம் வந்து ஒருகுறையையோ அல்லது அப்பெரியாரின் தயவைப் பெற்றுக் கொள்ளவோ யாசிக்கவோ இன்னம் பல்விதகுறைபாடுகளில் யாதேனு மொன்றை அன்புடன் கேட்டுக் கொள்ளும் பொழுது தன்னுற் கூடிய அளவு பிரயாசைப்பட்டு அவன் வேண்டுகோளைநிறைவேற்றவும், பொருமையுடனும் நோானபதிலுஞ்சொல்லி அன்னுன் மனதைத் திருப்தி செய்யாது, யேதோதன் அந்தஸ்தின் அதிகார வரம்பைக்காட்டி கர்னகடோமாய்ப் பேசியும் அவன் சிந்தையை நைய்ம்படியான செய்கைகளாலும் வார்த்தைகளாலும் வெருட்டுவதும் தன்னைப்போல் மானிடயாக்கை பெற்ற அம்மனிதன் சரிசமமாக நடக்கிறாவோ அல்லது சமமாக எதிர்வார்த்தை பேசிவிட்டாலோ ஜீவகாருண்ய முள்ள மேதாவிகளுக்கு அக்ஷணமே அகங்காரப்பேய் கிளம்பி கோபாவேசம் பிறந்து மரியாதையற்ற வார்த்தைகளால் அவமானப்படுத்த முற்படுகிறார்கள். ஒருக்கால் நேரிற் பேசாதிருப்பினும், துவேசத்தை மனதிற் கொண்டவராய் அதற்குரிய கடோமான வார்த்தைகளாலும் செய்கையாலும் “கடுத்துக்காட்டும் முகம்” என்றபடி தனது அழகிய முகாரவிந்தத்திலும் காட்டிவிடுகிறார்கள். இச்செய்கைகளை பலரிடத்தும்கண்கூடாகக் காண்கிறோம்.

நிற்க! மிருகாதி விஷயத்திற் பார்க்குமிடத்தில் ஒருவன் தன்வாழ்நாளைக்கழிக்கும் ஜீவனோபாயத்திற்காக வண்டிகளில் கட்டும் எருதுகளையோ பொதிமுதுகில் சுமக்கும் எருதுகளையோ. ஜட்கா வண்டிகளை இழுக்கும் குதிரைகளையோ வொன்றை வைத்துக் கொண்டு அதனல் வரும் ஊதியத்தைத் தானுந் தன்குடும்பமும் பசியின்றி உண்டுடுத்திக் களிப்பதோடுகூட அம்மிருகத்தின் போஷணையும் நடத்திவருகிறன். அப்படித்தொழில் நடத்திவருங்காலையில் தன் ஜீவனோபாயத்திற்கு உதவிபுரிந்து வருமவ்வெருதோ குதிரையோ பாரமிழுத்துச் செல்லுகையில் தன் உடல் வருத்தத்தாலோ, பசியின் கொடுமையாலோ, பலயீனத்தாலோ, அல்லது மண்சேறு முதலிய கஷ்டத்தாலோ, சற்றுதயங்கி நிற்குமாயின் அதன் எஜமானனுக்கு வரும்கோபம் அளவிடற்பாலது. கையிலிருக்கும் சாட்டையால் படும் அடிகளுக்கோ கணக்கில்லை. தார் என்று சொல்லிக கொள்ளும் இருப்பூசியால் குத்துகளும் அதனல் இரத்தம் பெருகுவதும் சகிக்கமுடியாது. இவ்விதத்தொந்தரவுகளைப்பொறுக்கமுடியாது பயந்து படுத்துக் கொள்ளுமானல் நாலைந்து பேர்கள் கூடி அதன் மூச்சைப்பிடித்தோ, கண்ணில் புகையிலைச்சாறோ, மிளகுவத்தல் பொடியையோ போட்டும் மிஞ்சினல், நெருப்பினல் சுட்டெழுப்புவதும், அவ்வெருதோ, குதிரையோ தன்னிந்திரிய உறுப்புகளின் வேதனை சகிக்கமுடியாது யெழுந்து வருத்தத்தோடு பாரத்தை இழுத்துச்செல்வதையும் கண்கூடாகப் பார்க்கின்றோம். (இன்னும்வரும்)

அடியார்க்கடியான்.
கொழும்பு.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சமத்துவம்.

காங்கிரஸ் பஜார்.

(முன் தொடர்ச்சி)

நாடார்—பாண்டிய நாடு தமிழ் நாட்டிற்கு திலகம் போன்றது. பாண்டிய மன்னர்கள் தமிழைப்போற்றி வந்தவர்கள். அந்த பரம்பரையான நாடார்கள் கால வித்தியாசத்தால் அரசுரிமை இழக்க, நாயக்கர் அரசாக்ஷி ஏற்பட்டது. சுமார் நாலுவருஷத்திற்கு முன் உலகத்தையே பயமுறுத்திய ஜெர்மெனி தோற்றுப்போன உடனே அவர்களை ஒவ்வொரு விஷயங்களிலும் நேசதேசத்தார் ஒதுக்கிவைத்தார்கள். ஆனால் ஜெர்மெனிமட்டும் அப்படியிருக்க சம்மதிக்கவில்லை. இது அரசுரிமைகளில் ஏற்படும்தோல்விக்குத்தக்க தண்டமுறைகள். அதேபோல் நாடார்களை நாயக்கர்கள் ஏதேதோ செய்துபார்த்தும் நாடார்கள் அடங்கியிருக்கக் கட்டுப்படாததால் இதர ஜாதியார்கள் நாடார்களை கௌரவமாக நடத்தக் கூடாதென்றும்கட்டுப்பாடு செய்தும், அக்காலத்தில் பிரதானமான ஆலய சுதந்திரத்தையும் தடுத்தார்கள். அதையும் லக்ஷியம் செய்யாமல் தங்களுக்கென்று தனியே பிரதிஷ்டை மற்றதும் செய்து கொண்டார்கள். இப்போது அதே முறையில் தான் நடக்கிறார்கள். (இங்குதான் முக்கியமான விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.) நாடார்கள் ஜாதியில் தாழ்ந்தவர்களல்ல ஒதுக்கப்படவுமில்லை. நாயக்கர் அரசாண்ட பாண்டிய நாட்டிலுள்ள ஆலயங்களுக்குள் மட்டும்தான் நாடார்கள் பிரவேசிக்கக் கூடாதே தவிர வேறெந்த ஆலயங்களுக்கும் சர்வ சுதந்திரத்துடனே போகிறார்கள். இதிலிருந்து நாடார்கள் ஆலயப் பிரவேசத்திற்கு யோக்கியமான ஜாதியா ரென்றும் இப்போது தடுக்கப் பட்டிருக்கிற பாண்டிய நாட்டிலும் முன்னால் அநுபவித்து இழந்த சுதந்திரத்தையே அடைய விரும்புகிறார்களென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது. ஹிந்துமதம் ஜாதிச் சண்டையில் ஈடுபட்டுப் போய்மத போதனையில்லாமையால் எங்கள் குலத்தவர்களில் சுமார் பாதிப்பேர் (மொத்தம் 13 லக்ஷத்தில் 6 லக்ஷம்) அன்னியமதத்தில் பிரவேசித்து விட்டார்கள். இதர ஜாதியாருக்குள் பெண் கொடுக்கல் வாங்கல் முதலியவைகள் இன்றியிருக்கும் சில உட்பிரிவுகளைப் போல் எங்களுக்குள்ளும் சில வித்தியாசத்தைத் தவிர கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களும் ஒரே கட்டுப்பாட்டோடு தான் இப்போதும் இருந்துவருகிறோம்.

மகாராஷ்ட்ராதலைவர்—என்ன ஆச்சரியம். இது உண்மையாயிருந்தால் நாடார்கள் வெகு சீக்கிரத்தில் முன்னேறுவார்கள்.

தமிழ்நாட்டுத்தலைவர்—உண்மை என்ன சத்தியமே! நாடார்கள் மகா ரோஷக்காரர்கள். பிடிவாதக் காரர்கள். சொன்ன சொல்லை நிறைவேற்றும் ஆற்றலும் படைத்தவர்கள். சமீபத்தில் திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் நாடார்களின் கட்டுப்பாடான மதுவிலக்குப் பிரசாரத்தைக் கண்டு தென்னிந்தியா ஜெர்மெனியர்களென்று சொன்னார்.

வங்காளத் தலைவர்—காங்கிரஸில்தான் சேரவில்லையே மதுவிலக்கேது?

தமிழர்—பாண்டிய நாட்டில் காங்கிரஸ்ஸ்தாபனங்களால் மதுவிலக்கு சரியாய்ச்செய்யமுடியவில்லை. நாடார் மகாஜன சங்கத்தில் நாடார்கள் மதுவிலக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள் உடனே அவர்கள் செய்தவேலை அபாரமானது எத்தனையோபேர்ஜெயிலுக்குப் போனார்கள்.

பஞ்சாப் தலைவர்—ஜெயிலுக்கும்போனார்களா?

தமிழர்—ஜெயிலுக்குமட்டுமா! சங்கம் உத்தரவினால் உயிரைவிடவும் தயாராகி விட்டார்கள்.

பஞ்சாப்தலைவர்—தமிழ்நாட்டார்சண்டாளர்கள்அறிவிற்சிறந்தபிராமணர்களை பழித்து ஒதுக்குவதில் புத்தியைச் செலுத்துகிறார்கள். வீரத்தில் சிறந்த நாடார்களைச் சேர்க்க தயங்குகிறார்கள். சுயராஜ்யம் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். என்னேபேதமை!

நாடார்—நாடார்களில் பெரும்பாலோர் வியாபாரம், விவசாயம் கைத்தொழிலையும் கைக்கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையோர் ராஜாங்க உத்தியோகமும் உபாத்திமைத் தொழிலும் செய்கிறார்கள். ராஜாங்கஉத்தியோகத்தில் வேலைபார்க்கும் நாடார்கள் நியாயத்தோடும் புத்திநுட்பத்தோடும் ஒழுங்கான முறையிலும் நிர்வாகம்செய்வதுப் இதர உத்தியோகஸ்தர்களையும் பொதுஜனங்களையும் அரசாங்கத்தையும் பிரமிக்கச் செய்வதிலொன்றும்ஆச்சரிய மில்லை தேசம் ஆளுவது நாடார்கள் குலதர்மம்.நாடார்களில் சோம்பேறிகளாவது பிச்சைவாங்கிப் பிழைப்போராவது காண்பது அரிது. ஒவ்வொருவரும் தங்களால் கூடியமட்டும் உழைக்கவேண்டும்.அப்படி இல்லாதவர்கள் தங்கள் ஜாதிக்குப் புறம்பானவர்களென்று பழிக்கப்படுகிறார்கள். ஆலய சுதந்திரம் மறுக்கப்பட்டதினால் நாடார்கள் பொதுவாழ்விலிருந்து விலகி தங்களுக்கென்று சகலமும் தனியே யேற்படுத்திக்கொண்டிருப்பதால் சமூக பொருளாதாரப்பிரசினைகளில்சகித் கொண்ணாத கஷ்டப்படுகிறார்கள்.அதோடு ராஜீய கக்ஷிகளின் இம்சையும் இப்போது சேர்ந்து கொண்டது பழையபடி தங்கள் சுதந்திரம் அடைந்தாலொழிய பொதுவாழ்வில் தீவிரமாய் கலந்துகொள்ள நாடார்கள் சம்மதப்பட மாட்டார்கள் இது உறுதி

வங்காளர்—அது நியாயந்தான் நாடார்களுக்கென்று தனியே கோவில் கட்டிக் கொண்டார்களே பின்னால் என்ன சமூக பொருளாதாரக் கஷ்டம் கோவில் பூஜை ? செலவுதானே.

நாடார்—சகோதரர்களே! இந்த உண்மையைநாடார் தலைவர்களும்சரியாய்அறியாமலும்அப்படியேஅறிந்தாலும்ரோஷத்தினால் அதைநிவர்த்திக்கமுடியாமலும் கஷ்டப்படுகிறார்கள். கோவில் பூஜைசெலவோடுமட்டும் நின்றுவிடவில்லை. அப்படிச் செலவு செய்வதைப் பற்றியும் கவலையில்லை. கிரேக்கர்கள் ரோமர்கள் மற்று முள்ளவர்களுடைய மேன்மையான நாகரீகங்களும் இருந்தஇடந்தெரியாமல் போனாலும் ஸநாதன தருமத்தைகடைக் கொண்ட இந்தியா தன் பூர்வீக நாகரீகத்தை எவ்வளவு கஷ்டத்திலும் இழக்காமல் சமாளித்துக்கொண்டதுபோல நாடார்களும் ஸநாதன தர்மத்தைப் பாதுகாத்த பாண்டிய அரசர்களின் பாரம்பரையானபடியால் தர்மகாரியங்களில் தலையிட்டு செய்வதோடு சகலவிதமான பொதுக்காரியங்களையும் தாங்கள் செய்யவேண்டிய கடமையென்று நினைத்துச்செய்து வருகிறார்கள். அதுதான் அந்தஜாதியை மேன்மைப்படுத்துகிறது. இப்போதுவருகிற பால்யர்கள் நாம் இவ்வளவு செலவு செய்தும் இதரஜாதியர்களோடு சேர்ந்து வாழ்வதற்குஇடமில்லாதிருப்பதால் அதை பற்றுவதற்கு வழி தேடவேணுமென்றும் பொதுவாழ்வில் மற்றவர்களோடு ஒத்துவாழவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். தற்காலத்திற்கு அதுதான் சரியாய்த்தெரிகிறது. நாடார் சமூகத்தின் பொருளாதாரகஷ்டம் பொதுவாகச் சொல்வதைவிட ஒரு ஊரைக்குறிப்பிட்டுச்சொன்னால் உங்களுக்கு நன்றாய்த் தெரியும் அதன்படி சொல்லுகிறேன்.

சமத்துவப் பிரியன்.

## வியாபாரத்தில் வேற்றுமை ஏன்?

(சின்னக்காமன் பட்டியிலிருந்து கம்மகுலாபிமானி ஸ்ரீமான் ஜி. குருசாமி நாயக்கரவர்கள் பின் வருமாறு நமக்கு எழுதுகிறார்.)

உலகத்தின் எழுவகைத்தோற்றத்தில் முதலாவது தெய்வம். தேவதொழில் சிருஷ்டித்தல், காத்தல், அழித்தல் என முத்தொழில். இவ்வெழுவகைத் தோற்றத்திலும் சிறப்புவாய்ந்தது மானிடப்பிறவி. மானிடஉயிரைக் காப்பாற்றுவதே கடவுளின் இரண்டாவது தொழிலாகிய ரக்ஷித்தல் அவ்ரக்ஷிப்புக்குறிய பொருள் உணவு உழவர்களிடத்திலிருந்தே உணவுகிடைக்க வேண்டுமென்பதை யார்தான் மறுக்கமுடியும்.மானிடர் செய்யும் தொழிலும் மூவகையாகும் அதாவது:- உத்தமத்தொழில், மத்தியத்தொழில், அதமத்தொழில் இந்த மூன்று தொழில்களில் முத்தொழிலாகிய உத்தமத்தொழிலென்னும் விவசாயத்தையே பிரதானமாகக்கொண்டவர்கள் எம் குலத்தவர்களாகிய கம்மகுல சிகாமணிகள். இரண்டாவது தொழிலாகிய மத்தியத்தொழிலாகிய வியாபாரத்தையே பிரதானமாகக் கொண்டவர்கள் நாடார்குல சகோதரர்கள். நம்மிருவகையாராலும் கைக்கொள்ளப்படாததே அதமத்தொழில். அதமத்தொழிலே ப்ரிதானம் எஞ்சம்முதலியவைகளுக்கு உறைவிடம்.

விசேஷமாக நாடார் குலத்தவர்களும் கம்மவார் குலத்தவர்களும் செய்யும் தொழிலிரண்டும் ஒன்றெனக் கூறலாம். ஏனெனில் இவ்விரு ஜாதியார்களை பிரதானமாகக் கொண்டுள்ள சிலவூர்களில் எம்குலத்தவர்களும் முக்கிய வியாபாரிகளாய் விளங்குகின்றனர். இக்குலத்தவர்களும் முக்கிய விவசாயிகளாயும் விளங்குகின்றனர். இப் பேர்ப்பட்ட முதன்மையான தொழில்களை புராதானமாகக்கொண்டுள்ள நம்மிரு குலத்தவர்களாகிய சகோதரர்களே! மேனாட்டார்கள் போல் நமக்குள் கூட்டுறவு வேண்டுமென்று நாள்தோறும் பத்திரிகைகளெல்லாம் கூக்குரலிடுகிக்காலத்தில் இந்திய சகோதரர்களாகிய நாம் ஏன் முதலில் கூட்டுறவாக யிருக்கக்கூடாது? சுமார் இரண்டு வருஷமாக சில போலிமுகாந்தரங்களைக்கொண்டு பருத்தி வியாபாரத்தில் எம்குலத்தவர்களில் சிலரும் நாடார்களில் பலரும் ஒருவரொருவர் வியாபாரம் கொடுக்கக்கூடாதென்றும் வாங்கக் கூடாதென்றும் ஜனங்களுக்கு திருப்புத்திபுகட்டிவருவது விசனிக்கத்தக்கதே. பாரதமக்களாகிய நாமே இவ்விதம் முரண்டுசெய்துகொண்டிருந்தால் மேனாட்டார் பேரில் கூட்டுறவுவிஷயமாய் குறை கூறுவது எங்ஙனம் "கரும்பு கட்டோடிருந்தால் எறும்புதானே வரு" மென்பதை உணராதவர்கள் நம்மிலுண்டோ ? ஆகையால் சகோதரர்களே ! வியாபாரம் உன்னத நிலைமையடையும்படி ஒவ்வொருவரும் ஒற்றுமை நாட்டப் பிரயாசைப்படக் கடமைப் பட்டவர்களாக இருக்கிறோம். ஆகையால் குலாபிமானிகளும் ஜனாபிமானிகளும் தேசாபிமானிகளும் முயற்சியெடுத்து தடைகளைத் தடுத்து ஒற்றுமை நாட்ட எல்லாம் வல்ல ஈசன் அருள்புரிவாராக ! சுபம் !

## நாடார் மகாஜன சங்கப் பிரசாரம்.

"பாண்டியகுல தீபம்" பத்திராதிபரின் சுற்றுப் பிரயாணம்.

சென்ற நான்கு மாதகாலங்களாய்ப்பாண்டியகுல தீபம் பத்திராதிபர் ஸ்ரீமான் கே. எஸ். அருணகிரி நாடார் அவர்கள் நாடார் மகாஜன சங்கத்தின் பிரசாரமாக நாங்குநேரித் தாலுகாவுக்கு விஜயஞ்செய்து அநேக கிராமங்களில் நாடார்களுக்குப் பெருங் கூட்டங் கூட்டி வைத்து அதில் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஒற்றுமைகளுக்கேதுவான நற்காரியங்களை எடுத்துரைத்து சிற்சில கிராமங்களில் ஏற்பட்டிருந்த கக்ஷிப்பிரதி கக்ஷிகளைதீர்த்து வைத்து ஒவ்வொரு கிராமங்களிலும் மகமைகள் ஏற்படுத்தியும், கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்தும் மகாஜன சங்கத்திற்கு தலைக்கட்டுவரியையும், அங்கத்தினர் மூலமாய் ரூ 1000க்கு மேல் சேகரித்து வந்ததிலிருந்து இத்தாலுகாவில் நாடார்களுக்குள் புதிய ஊக்கமும் ஜாய்ச் சகைத்தின மீது நன்னோக்கமும் ஏற்பட்டிருக்கிறது. அக்கனவான் சிதம்பரபுரம் வந்து நாடார்களுக்குள் குலாபிமானத்தை பரவச்செய்து நாங்குநேரித் தாலுகா நாடார் மகாஜன மகாநாடொன்றுகூட ஏற்பாடு செய்து ஷை மகாநாட்டை வெகு விமரிசையாய் நடத்தினார்கள்.

இக்கனவான் இத்தாலுகாவில் இன்னும் ஆறுமாதகாலம் வரை பிரசாரஞ்செய்து வந்தால் நாடார் மகாஜனங்களுக்கு வெகு நன்மையுண்டாகக் கூடுமென நாடார் மகாஜன சங்கம் கனம் காரியதரிசி அவர்களை கேட்டுக் கொள்கிறேன் என்று ஸ்ரீமான் எ. ஜெயராஜ்எழுதுகிறார்.

* * *

பேட்டைக்குளம் போஸ்ட்டு,
முத்துக்கிருஷ்ணபுரம்.

இவ்வூருக்கு நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் ஆ. சி. முத்தையா நாடாரவர்கள் 25-3-23 ல் விஜயஞ் செய்திருந்தார்கள். அன்னவரை அன்புடன் வரவேற்று உபசரிக்கப்பட்டது. பின்பு இரவு 8-மணி சுமாருக்கு கோவில் முன்பாக கனம் பிரசாரகர் அவர்களால் நமது முற்கால தற்கால நிலைமையைப் பற்றியும் நமது சங்கத்தின் நோக்கம் யென்னவென்பதைப் பற்றியும் வெகுதெளிவாயும் உருக்கமாயும் நீண்டதோர் உபந்நியாசம் செய்யப்பட்டதின் பேரில் மகாஜனசங்கத்திற்கு புதிய ஆர்டினரி அங்கத்தினராக சேர்த்து ரூ 12 ம் கொடுத்து அனுப்பி வைத்திருக்கிறோம் என்று ஸ்ரீமான் ஏன். எ. பொன்னுசாமி நாடார் எழுதுகிறார்,

## சங்க விஷயங்கள்.

பாலிய நாடார் சங்கம் கொழும்பு.

இச்சங்கத்தின் இரண்டாவது மாதாந்தரக்கூட்டம் இம்மாதம் 15-4-23 ல் கொள்பெட்டி 247-ம் நம்பர் கட்டிடத்தில் மாலை 9½மணிக்கு கூடிற்று அவ்வமயம் குலாபிமானியும் ஒய். எம். சி. ஏ. காரியதரிசியுமாகிய ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயக நாடாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள் என்றுஸ்ரீமான்மதுரேந்திர நாடார் எழுதுகிறார்.

நாடார் பால்ய கிளைச்சங்கம் நடுவபட்டி.

இவ்வூரில் 13-4-23 ல் சங்க வருஷ கொண்டாட்டத்திற்கு ஸ்ரீமான் ஆ. பு. வீரபத்திர நாடார் அக்கிராசனம் வகித்தார் சிவகாசி பெ. ச. முத்தய நாடார்பிரஸிடெண்டாகவும் சீ.ச.வே சுப்பய நாடார் வைஸ்பிரஸிடெண்டாகவும் ந. கா. வீ. வீரப்ப நாடார் மானேஜராகவும் ந. ச. மீனாக்ஷி நாடார் காரியதரிசியாகவும் தீர்மானிக்கப்பட்டது சங்க வருஷகொண்டாட்டம் வெகு விமரிசையாக நடைபெற்று சபை இனிது கலைந்தது என்று காரியதரிசி ஸ்ரீமான் கோபால்சாமி நாடார் எழுதுகிறார்.

இலங்கை நாடார் ஐக்கிய சங்கம்.

கொழும்பு மெலிபன்தெரு 6நிர் கட்டிடத்தில் 15-4-23 ஞாயிற்றுகிழமை மாலை 9-30 மணிக்கு கப்பனை இங்கிலிஷ் ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் சாலோமன் நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நான்காவது ஜெனரல் மீட்டிங் நடைபெற்றது. பல உபந்நியாசங்கள் நடைபெற்றன என்று காரியதரிசி எழுதுகிறார்.

இரங்கூன்.

23-4-23ல்பெரையூர் நாடார்கள் பொதுக் கூட்டம்40-28நிர் கட்டடத்தில்மாலை 7-3 மணிக்குஸ்ரீமான்க..மு.அப்பாவுநாடாரவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது அவ்வமயம் பல முக்கிய நடபடிக்கைகளும் நிர்வாக நடபடிக்கைக்கு சாதகமாகப்பல தீர்மானங்கள் செய்யப்பட்டது என்று ஸ்ரீமான் அ. பெரியசாமி நாடார் எழுதுகிறார்.

க்ஷத்திரியகுல பால்யரின் மனோஹர வாசகசாலை.

"க்ஷத்திரிய மித்திரன்" பத்திராதிபர் கனம் பு. விஜயதுரைசாமிக் கிராமணி அவர்களின் வரவேற்புக் கொண்டாட்டம் சானது ஏப்ரல்மீ 23-ம்தேதி திங்கட்கிழமை இரவு 9மணிக்கு பிரபல வியாபாரியான கி. மு. இ.அந்தோனிமுத்து நாடார் அவர்களின் வியாபார ஸ்தலத்தில் ஷை கூட்டம் வெகு விமரிசையாய் நடைபெற்றது. 9-மணிக்கு கனம் கிராமணியார் அவர்கள், நிர்-26. நாரிஸ் ரோட் S. D. M. & Bros கிட்டங்கியிலிருந்து மோட்டார்ரதத்தில் அழைத்துவரப்பட்டார்கள். பல உபந்நியாசங்கள் நடைபெற்றன பின் புது சந்தாதாரர்களும் மித்திரன் க்ஷேமநிதியுமாக 165 ரூபாய் வசூலித்த பின் கிராமணியாரவர்கள் தன் திருவாய்திறந்து சொற்பொழிவு மொழிந்தனர். இதோடு 5-வது மாதாந்தர மீட்டிங்கியும் நடந்தேறியது என்று காரியதரிசி எழுதுகிறார்.


## மயிர்போக்கும் தூள்.

சாம்பில் பாக்கட் 1½ அணா 2½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பாக்கட் இனும் விலை சாப்தாவுக்கு எழுதவும். வியாபாரிகளுக்குத் தகுந் தகமிஷனும் போர்கேளும் சப்ளை செய்யப்படும்.

M.P.S. சாமியண்ண நாடார் அன் சன்ஸ்,
62-உள் தெரு,
விருதுபட்டி.


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# அக்கிராசனப் பிரசங்கம்.

நாடார் மகாஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீமான்

## M. V. பழனிச்சாமி நாடார் அவர்கள்

23—4—23-யில்

அருப்புக்கோட்டை, M. M. M. வாசகசாலையின் 2-வது வருடப் பூர்த்திக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்துப் பேசினது பின் வருமாறு

கனவான்களே!

இன்று நடாத்தும் "ஸ்ரீமான் முதலாளி மு. மு. முத்துச்சாமி நாடார் ஞாபகசின்ன வாசகசாலை" யின் இரண்டாம் வருடப் பூர்த்திக்கொண்டாட்டத்திற்கு தலைமைவகிக்க என்னிலும் வயதில்முதிர்ந்தவர்களும் அறிவும் ஆற்றலும் அநுபோகமும் மிகுந்துள்ள மேதாவிகளாகோர்களிருப்பினும் அவர்களைவிடுத்து என்னை நீங்கள் தெரிந்தெடுத்ததினால் நான் கௌரவமடைகிறேன்.

இன்று நீங்கள் இந்த சந்தர்ப்பத்தில் என்னை தலைவனாக கொண்டதற்கு காரணம் யாதாவதென்று ஆராயுங்கால் எனது சிற்றறிவைக்கொண்டு இதுபோன்ற சிற்சில கூட்டங்களில் தலைமைவகித்திருக்கிறேனென்றதைக் கொண்டோ அல்லது தங்களுரில் பிறந்தவனென்ற பிறப்புரிமையைக்கொண்டோ அல்லது நாடார் மகாஜன சங்கத்தின் ஓர்ஊழியனென்ற நிலைமையிலோ வென ஐயமுறுகிறேன்.

சகோதரர்களே!

இப்போது தங்கள் மத்தியில் எனது அபிப்பிராயம் சொல்லவந்திருக்கிற நான் சொல்லும் விஷயங்கள் இதற்குமுன் வருஷத்தில் இந்த சந்தர்ப்பத்தில் தங்களுக்குச் சொல்லிய எனது சகாவின் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டிருந்தாலும் அல்லது அவர்கள் சொல்லியதைப்பார்க்கிலும் கீழ்ப்பட்டவைகளாகத்தானிருந்தாலும் உங்களுக்குத் திருப்திபாய் நடத்தலையாவிட்டாலும் நீங்கள் வெறுப்படைந்தவர்களாய் கருதப்படுவது மல்லாமல் என் கடமையை செய்ததவறிவிட்டவனாய் நான் கருதவேண்டும் தகுதியில்லாத என்னை வற்புறுத்தி வரும்படி அழைத்த "நாடார்குலமித்திரன்" பத்திராதிபரும் எனதருமை நண்பருமான ஸ்ரீமான் ரு. ஆ. முத்துநாடாரை அவதூறுசொல்லுவீர்களென அஞ்சி நான் சொல்லுவதெல்லாம் தங்களது எனவாக ஏற்றுக்கொள்ள தவறமாட்டீர்களென்ற முழு நம்பிக்கையோடு என்மனமுவந்த வந்தனத்தை செலுத்துகிறேன்.

என் முகவுரையில் நான் சொல்லவேண்டிய விஷயங்கள் பலவும் சொல்ல எனக்கு சாவதானம் உண்டென்றாலும் கடவுளா என்ற ஒன்றிருப்பதால் முகவுரையில் பார்க்கிலும் கடவுளையில் விசேஷமாய் சொல்ல இடந்தருவீர்களென்ற நம்பிக்கையோடு அதிகமாய்ச் சொல்லுவதை விட்டுவிட்டாலும் "வாசகசாலை" யெனுமிடத்தமட்டும் முகவுரையில் சொல்லப் பிரியப்படுகிறேன்.

வாசகசாலை.

வாசகசாலை யென்று சொல்லப்புகின் அது கல்விக்கு பீடமாகிய சரஸ்வதின் இருப்பிடமென்றே சொல்லவேண்டும்.

இவ் வாசகசாலையானது ஆரம்பித்து இரண்டு வருஷங்களாகின்றனதென்பது வெள்ளிடைமலை போலிருப்பினும் இதுபோன்ற சாதனங்களில் ஒன்றாகிய "நாடார் கல்விப்பிரசங்க சபை" யென்ற நாமதேயத்தோடு வெகு காலத்திற்குமுன் நீங்கள் ஏற்படுத்தி, சகலவித நன்மைகளையும் குல விர்த்திக்கான யேதுக்களையும் செய்துக்கொண்டவர்களில் சிரத்தை யுடையோர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. இவ்வாசகசாலையானது நவீனமுறையில் நம் குல மேன்மைக்கு எவ்வளவு முக்கியமென்பதை நீங்கள் உணர்ந்து ஸ்தாபித்திருப்பதைப்போல் இதற்கு முன்னுள்ள நம்முன்னோர்கள் உணர்ந்து பொது ஜனங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அன்னதான சத்திரங்களையும் சாவடிகளையும் ஸ்நானபானஞ்செய்ய நந்தனவனங்களையும் விசேஷமாய் தாகம் அருந்திக்கொள்ள கிணறு குட்டைகளையும், மோக்ஷ சாம்ராஜ்யமடைவதற் கேதுவாகிய தேவாலயங்களையும் இன்னும் இது போன்ற அநேக சாதனங்களையும் செய்துள்ளார்களென்பதை நீங்கள் மறந்துவிடமாட்டீர்கள்.

இவைகளுள் தற்காலமுறையில் வாசகசாலையே மிகஅவசியமென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன் இவ்வாசகசாலையினால் அநேக நன்மைகள் உண்டென்றும் இதுபோன்ற வாசகசாலைகளினுலேயே ஒரு குலத்தவர் ஒரு தேசத்தவர் உன்னத நிலைமைக்கு வரத் தெரிந்துகொள்ளவேண்டியவிஷயங்கள் அநேகம் உளவென்றும் கல்வியில் விசேஷ பிரியமுடைய இருபாலரும் இவ்வாசகசாலையின் ஒத்தாசையைக் கொண்டு அநேக விஷயங்கள் தெரிந்துகொள்ள யேதுக்கள் உண்டென்றும் இதுபோன்ற வாசகசாலைகளில் அடங்கியுள்ள அரியபெரிய நூற்கள் சமாசார பத்திரிகைகள் முதலியன தங்களைத் தெரிந்துகொள்ளும்படி தூண்டிக்கொள்ள யேதுக்கள் உண்டாகிறதென்றும் ஓய்வு நேரங்களில் இவ்வாசகசாலைக்கு வருவதால் நமக்குள்ள மனமாச்சர்யங்களை நீக்கிக்கொள்ளவும் நம்மில் ஒருவர்க்கொருவர் உள்ள அறிவு சிரேஷ்டங்களை தெரிந்து விருத்திசெய்துகொள்வதற்கும் யேதுக்கள் உண்டாகின்றனவென்றும் இதற்காக அநேகவாலிபர்கள் இபாகஞ்செய்ய முன்வர வழிகளிருக்கின்றனவென்றும் இப்படியேற்படும் ஹேதுக்களினால் நம் குலத்தவர்களுள் யேற்பட்ட அநேககுறைகள் நிவர்த்திக்கப்படுகின்றன வென்பதற்குச் சாதகமாகயிருக்கின்றதென்பதையும் நீங்கள் மறுக்கமாட்டீர்கள்.

மேல் நாடுகளிலுள்ள இதுபோன்ற வாசகசாலைகளின் ஒத்தாசையைக் கொண்டே அரியரசாயன முறைகளும் தத்துவசாஸ்திர முறைகளும் நுணுக்கமாய் தெரிந்து கொள்ளப்பட்டு அநேக நவீன கைத்தொழில்கள் விர்த்தியாகிக்கொண்டுவருகிறதென்றும் நான் அறிந்திருக்கிறேன். இதுவுமல்லாமல் எனது நண்பர்களிற் சில எளியநண்பர்கள் இவ்வாசகசாலைபோன்ற சிலவாசகசாலைகளின் சகாயமில்லாவிட்டால் தாங்கள் உயர்தரக்கல்வி யபிவிர்த்தியடைந்திருக்க முடியாதென்று சொல்லியதையும் கேட்டிருக்கிறேன். அமெரிக்கா போன்ற சில நாட்டார்கள் தங்கள் நாட்டினர் நிபுணர்களாயிருப்பதற்கு சாதகமாய் வாசகசாலைகளிலிருந்துபடிப்பதற்குபுஸ்தகங்கள் விநியோகித்து வருவதையும் வாசகசாலைகள் யேற்படுத்தப்படாத சுற்றுக் கிராமங்களுக்கு **Travalling Librarios** என்ற நாமத்தோடு மோட்டார் வண்டிகளில் புஸ்தகங்களைக்கொண்டுபோய் விநியோகித்து வாசிக்கச் செய்துகொண்டிருப்பதையும் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்பேர்ப்பட்ட உபாயங்களுக்கெல்லாம் இவ்வாசகசாலையானது எவ்வளவு உபயோகமானதென்பதை நீங்கள் உணர்வீர்கள்.

இன்னும் எனது நண்பர்களிற் சிலர் மதக்கோட்பாடுகளை நுண்ணியமாய் அறிந்துகொள்ளுவதற்கு இவ்வாசகசாலை போன்ற வாசகசாலைகளின் உதவி மிகவும் அவசியமாயிருந்ததென்று சொல்லவும் கேள்விப்பட்டிருக்கிறேன். மேலும் இடையிடையில் ஏற்படும் சோம்பல்களை நிவர்த்திக்க யேதாவது சமாசாரப்பத்திரிகைகள் புஸ்தகங்கள் கிடைக்குமாவென்று நாடுவதற்கு சாதகமாக யிருப்பதுவும் வாசகசாலையென்றே எனக்குத்தோன்றுகிறது. இதோடு அமெரிக்காநாட்டில் மட்டும் 26000 வாசகசாலைகள் உண்டென்று கேள்விப்படுகிற நமக்கு வாசகசாலையினபிவிர்த்தியில் அங்குள்ளவர்கள் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்களென்பதும் அதனால் அந்த நாடு எவ்வளவு உன்னத நிலைமையை அடைந்திருக்கிறதென்பதும் நன்குவிளங்குகிறதல்லவா? இதிலும் இவ்வாசகசாலையின் பேயர் பொதுவாயில்லாமல் இவ்வூரில் பரித்தியாகஞ்செய்த ஓர் தலாபிமானியின் பெயரோடு அமைத்திருப்பதில் அன்னவாடைய ஞாபகார்த்தமாயிது அமைந்திருப்பதுமட்டு மல்லாமல் அன்னவர்போல் அநேக பிரமுகர்கள் குலநன்மைக்கேதுவான அநேககாரியங்களைச்செய்யமுன் வரவேண்டுமென்ற நோக்கத்தோடேயே யேற்படுத்தப்பட்டிருக்குமென்றும் நான் எண்ணுகிறேன்.

அதற்கு அனுசரணையாய் இந்த வாசகசாலையில் இருக்கும் புஸ்தகங்களைப் பா

## இலங்கை நாடார்களுக்கோர் நற்செய்தி.

நாடார் குலாபிமானிகளே!

நமது 'க்ஷத்திரிய மித்திரன்' பத்திராதிபரும் சாஸ்திர ஆராய்ச்சி வல்லுனரும், குலாபிமான தீரருமான கனம் ரு. வி. ஜேயாநுலைசியமி கிராமணியாரவர்கள் சென்னையிலிருந்து குபேரநாடாவ இலங்கா நகரத்திலுள்ள சரித்திரர்க்கிலும் இன்னும் அரியபெரிய நூற்களை ஏனைய சேர்த்துவைக்க வேண்டிய பிரயத்தனங்களையும் இன்னுள்ள புஸ்தகங்களை பொதுஜனங்கள் படிப்பதற்கு சாதகமாய் விநியோகஞ்செய்யுமேற்பாட்டையும் இவ்வாசகசாலைக்கு வாராமான அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டிய முயற்சிகளையும் இவ்வாசகசாலையினால் பொதுஜன மக்களின் அறிவு அதிகரிக்கச்செய்யவேண்டிய முயற்சிகளையும் விசேஷமாய் அநேகயிதர சமாசார பத்திரிகைகளை தருவித்து விஷயங்களை தெரிந்துகொள்வதையும் கல்விச் சாலைகளிலிருந்து வெளியேறும் மாணவ மாணவிகளின் அறிவை அபிவிர்த்திபண்ணுவதற்குரிய வழிகளில் இவ்வாசகசாலையை மேன்மேலும் உன்னத ஸ்தானத்திற்குப் கொண்டுவர வெகு உற்சாகத்துடனும் தனாதைக்கத்துடனும் உழைத்துவருவீர்களென்று நம்புகிறேன்.

சம்பந்தமான ஸ்தலங்களைத் தரிசிக்கவும் பிரபல செந்தமிழ் மாதசஞ்சிகையாம் ஞான க்ஷத்திரியம் திரிகளை அபிவிருத்தி செய்ய இலங்கை நாடார்களின் ஆதரவைநாடியும் வானது வைகாசிமாதம் 16-ந் தேதியில் இலங்கைக்கு விஜயம் செய்வதாயறிவித்திருக்கிறார்களென்பது இலங்கை நாடார்களுக்கோர் நற்செய்தியல்லவா? கனம் கிராமணியாரவர்களை யேறிற் சந்திப்பதும், அவரது மதுரமொழிகளைச் செவிமடுப்பதும், அவரது அருமுயற்சிக்குத் தகுந்த ஆதரவளிப்பதும், நாடார்கள் ஒவ்வொருவரையும் பொருத்த கடமையாகும். நாடார் ஜனசமுகன்மையையபடித்தம் உடல், பொருள் ஆவிமூன்றினையும் தத்தம் செய்த பண்ணியசீலர் இவரொருவரேயன்போம். ஆதலால் இலங்கையிலுள்ள நாடார்குலாபிமானிகளனைவரும் தனவந்தர், ஏழைகள், பெரியோர், சிறியோர் என்ற பேதமின்றி கனம் கிராமணியாரவர்களுக்கு மனப்பூர்வமாய் அவரவர் சக்திக்கேற்றவாறு பொருளுதவி செய்து அவர் இயற்றிவைத்துள்ள பல புத்தகங்களை வெகு துரிதத்தில் அச்சியற்றத்தகுந்த ஒத்தாசைசெய்யுமாறு அன்புடன் கோருகின்றோம்.

| | |
|---|---|
| க்ஷத்திரியமித்திரன் வருடசந்தா | 3—0—0 |
| டை ஜீவிய சந்தா | 30—0—0 |
| டை போஷகப்பிரபு சந்தா | 50—0—0 |
| டை இரக்ஷகர் சந்தா | 100—0—0 |

நாடார் குலாபிமானிகள்.

நமது மித்திரன்

## போஷகப் பிரபுக்கள்.

மதுரை ஜில்லா, பொட்டிப்புரம் ஸ்ரீமான் அ. இருளப்ப நாடார்.
உசிலம்பட்டி, ஸ்ரீமான் முதலாளி ப. வீ. ஆதிமூத்துமாலை நாடார்.
மதுரை, ஸ்ரீமான் G. ஜோசப் நாடார் B. A. B. L.
சென்னை, நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.
சென்னை, ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்.
கொழும்பு, ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.

திருநெல்வேலி ஜில்லாவில்.

கவிசேகரபுரம். ராவசாகிப் டாக்டர் ஸ்ரீமான் J S. வாமேக் நாடார்.
ஆறுமுகநேரி, ஸ்ரீமான் சு. சி. பொன்னுச்சாமி நாடார்.
இட்டமொழி. ஸ்ரீமான் A. யேசுவடியான் நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ரா. பொன்னையா நாடார்.
நாதக்கிணறு, ஸ்ரீமான் S. தங்கச்சாமி நாடார்.
கீழமங்கலூர், ஸ்ரீமான் த. ரா. ஜெயமணி நாடார்.
சாத்தான்குளம்விளை, ஸ்ரீமான் ரா. உலகநாத நாடார்.
கிழவனேரி, ஸ்ரீமான் க. ம. அந்தோணிமுத்து நாடார்.
நாங்குனேரித் தாலுகா புதூர், ஸ்ரீமான் ரா. பாக்கியநாத நாடார்.
ஆறுமுகநேரி. ஸ்ரீமான் ஆ. பொ. தங்கராஜ் நாடார்.
பொம்மடிக்கோட்டை, மெஸ்ஸாஸ் ச. தங்கப்பாண்டி நாடார் அன் பிரதர்ஸ்.
நடுவக்குறிச்சி, ஸ்ரீமான் க. தி. வெள்ளையா நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ஆ. சாமிநாத நாடார்.
இட்டமொழி, மெஸ்ஸர்ஸ் N. சாலோமோன் நாடார் அன்பிரதர்ஸ்.
சாத்தான்குளம், ஸ்ரீமான் தே. பே. மரியராயப்ப நாடார்.
வெள்ளாளன்விளை, ஸ்ரீமான் யோ. யோசேப்பு நாடார்.
மானூர்தண்டுப்பத்து, ஸ்ரீமான் ரு. ந. நவமணி நாடார்.
இராஜாவின்கோவில், ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார்.
திருநெல்வேலி, ஸ்ரீமான் அரி. ரு. செண்பக நாடார்.
மானூர்தண்டுப்பத்து, ஸ்ரீமான் சேர. செல்வத்துரை நாடார்.
திருப்பாப்பு நாடார்விளை, ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார்.
சிவகாடன் குடியிருப்பு, ஸ்ரீமான் வே. வே. சுடலைமாட நாடார்.
பெரியதாழை, ஸ்ரீமான் கா. ஆறுமுகவீரர் நாடார்.
சிவகாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் ஐ. அய்யங்கன் நாடார்.
சிவகாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார்.
உடையார்குளம், ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார்.

இராமநாதபுரம் ஜில்லாவில்.

வையூர், ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமார் நாடார் அன் பிரதர்ஸ்.
இலுப்பையூர், ஸ்ரீமான் பு. ரு அ. கணபதி நாடார் அன் பிரதாஸ்
புத்தாதிபுரம், ஸ்ரீமான் ரு. பி. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. ப. சின்னக்காளை நாடார் அன் பிரதர்ஸ்.
முதுகுளத்தூர், ஸ்ரீமான் மா. கருப்பையா நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் மா. க. ராமசுவாமி நாடார்.
மேட்டுப்பட்டி, ஸ்ரீமான் பெ. பிச்சார் நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் த. வ சி. கிருஷ்ண நாடார் அன் பிரதர்ஸ்.
கீழப்பெருங்கரை, ஸ்ரீமான் பெ. ச. மாடசாமி நாடார் அன் பிரதர்ஸ்.
ரெட்டியபட்டி, ஸ்ரீமான் ரெ. அ. சஞ்சீவீர நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் வே. பொன்னையா நாடார்.
பழையனூர், ஸ்ரீமான் செ. மு. சிவன் நாடார் அன்பிரதர்ஸ்.
எலிக்கநாயக்கன்பட்டி, ஸ்ரீமான் கி. ஆ. காமாக்ஷி நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் மா. க. மதனக்கருப்ப நாடார்.
வளசாடு, ஸ்ரீமான் சி. சாமியய்யா நாடார்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. சி. ப. மூத்தையா நாடார்.
வடபட்டி. ஸ்ரீமான் அ. க. வேலாயுத நாடார்.
சிவகாசி, ஸ்ரீமான் M. தருமராஜ் நாடார் B. A. B. L.
விருதுபட்டி, ஸ்ரீமான் க. ரு. பொன்னப்ப நாடார்.
அருப்புக்கோட்டை, முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார்.

### மித்திரன் விசேஷப் போஷகப் பிரபு.

இரங்கூன், பிரபல வர்த்தகரும், இட்டமொழியூர் ஹைஸ்கூல் ஸ்தாபகரும், பர்மா, சட்டநிரூபணசபை அங்கத்தினரும், லக்ஷாதிபதியுமான ஸ்ரீமான் A. V. ஜோசப் நாடார் அவர்கள்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection